# சின்ன ராசா கண்ணுறங்கு

வகுப்பு - 4, தமிழ்

**தாலாட்டு**

குழந்தைகளின் செவிக்கு முதலில் வந்து சேரும் இசையான தாலாட்டு பாடல்கள். இவை நாட்டுப்புறப் பாடல் மரபில் மிகவும் கருத்து பொதிந்ததாகவும், கற்பனை மிகுந்த பொருளுடனும் பாடப்படுகிற வாய்மொழி மரபினைச் சார்ந்தது.

இத்தகைய சிறப்பு மிகுந்த இனிய தாலாட்டுப் பாடல் பகுதி பாடப்புத்தகத்தின் மூலம் நமது வகுப்பறைக்கும் இனிமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. இதைப் பாடமாக மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கும் பொழுது பொருத்தமான சில செயல்திட்டங்களை செயல்முறைப்படுத்தலாம்.

பாடத்திட்டத்திற்கான சில செயல்பாடுகள்:

- கிராமத்தில் வழக்கில் உள்ள பாடல்களை மாணவர்களின் மூலமாக சேகரிக்கச் செய்தல்.
- கிராமத்தில் கிராமியப் பாடல் தெரிந்த முதியவர்களை அழைத்து வகுப்பில் பாடச் செய்தல்.
- கிராமியப் பாடல்களின் வகைகளை அறியச்செய்தல்.
- கிராமத்தில் புழக்கத்தில் உள்ள சொற்களைச் சேகரிக்கச் செய்தல்.
- மறைந்து போன சொலவடைகளைச் (பழமொழிகள்) சேகரிக்கச் செய்தல்.
- தொழில் சார்ந்த பாடல்களை சேகரித்து அவற்றை ஆவணப்படுத்தச் செய்தல்.
- உள்ளூர் வாய்மொழி கிராமியக் கதைகளைக் கேட்டு அவற்றை ஆவணப்படுத்தச் செய்தல்.
- அண்டை மாநிலத்தில் உள்ள கிராமியப் பாடல்களையும் கணிப்பொறி துணைக்கொண்டு அறிந்து கொள்ளச் செய்தல்.
- அண்டை மாநில பாடல்களோடு நமது மாநிலத்தின் மற்றும் நமது கிராமத்தின் பாடல்களுக்குள் உள்ள இசையை ஒப்பிட்டு பார்த்துக் கொள்ளச் செய்தல்.
- கிராமத்தில் உள்ள தொழில்களை வரிசைப்படுத்தி அவருக்கானப் பாடல்கள் ஏதாவது இருந்தால் அவற்றையும் அறிந்து சேகரிக்கச் செய்தல்.
- குல தெய்வ வழிபாடுகளுக்கு எதாவது கிராமிய பாடல்கள் இருக்கிறதா என்று ஆய்வு செய்யச் செய்தல்.
- கிராமிய இலக்கிய பாடல்களான தாலாட்டு, நடவு, ஒப்பாரி போன்ற பாடல்களோடு இன்றைய திரை இசைப்பாடல்களோடு ஒப்பிட்டு அவற்றின் வித்தியாசங்களை அறிந்து கொள்ளச் செய்தல்.
- வழக்கு சொற்களுக்கும் மரபு சொற்களுக்கும் பாடப்புத்தகச் சொற்கள் உள்ள வித்தியாசங்களை வேறுபடுத்தச் செய்தல்.
- தாலாட்டு, நடவு, ஒப்பாரி பாடல்களைச் சேகரித்தல்.

இதன்மூலம் மாணவர்களுக்கு தாலாட்டை அறிமுகப்படுத்துவது மட்டுமில்லாமல் வழக்கு மொழியில் இருக்கும் தாலாட்டு, தெம்மாங்கு, நடவுப்பாடல், ஒப்பாரி போன்ற வெவ்வேறு விதமான நாட்டுப்புறப் பாடல்களையும் அறிமுகப்படுத்த முடியும்.

இன்றையச் சூழலில் நகரங்களில் மட்டுமின்றி கிராமப்பகுதிகளிலும் நாட்டுப்புற இசையின் பயன்பாடும் அதன் மீதான ஈடுபாடும் குறைந்து வருவதால் இந்தச் செயல்பாடுகளைச் செயல்படுத்துவதில் சில இடர்ப்பாடுகள் இருப்பினும், நமது வழக்காறுகளை மீட்டெடுத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்க இத்தகைய செயல்பாடுகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் நாம் அனைவருக்கும் இருக்கிறது. மேலும் நம்மிடையே வாழ்ந்துக் கொண்டிருக்கிற நாட்டார் பாடல்களைப் பாடுகிறவர்களுக்கு உரிய மதிப்பை உருவாக்கவும் இத்தகையச் செயல்பாடுகள் வழி வகுக்கும்.

## தாலாட்டுப் பாடல்கள்

1. ரே ரே ரே ரே ரே ரே
ரே ரே ரே ரே ரே ரே
அம்மா வர நேரஞ்செல்லும்
தூங்கு கொட்டாஞ்சி
ரே ரே ரே ரே ரே ரே
ரே ரே ரே ரே ரே ரே
தூங்கி எழுந்தா வந்து நிப்பா
தூங்கு நீ தூங்கு
ரே ரே ரே ரே ரே ரே
ரே ரே ரே ரே ரே ரே

2. ஆரிரோ ஆராரோ ஆரி ரரி ராராரோ
ஆரிரோ ஆராரோ ஆரி ரரி ராராரோ

கண்ணே கண்பணியே என்று நான்
பாடவல்ல
கண்ணே கண்பணியே என்று நான்
பாடவல்ல

கண்ணும் வேனாம் மணியும் வேனாம்
ஒண்ணுமே புரியல உலகத்துல

ஆரிரோ ஆராரோ ஆரி ரரி ராராரோ
ஆரிரோ ஆராரோ ஆரி ரரி ராராரோ

3. லாலி லாலி லாலி லாலி
லாலி லாலி லாலி லாலி
சின்ன மகளே லாலி
செல்ல மகளே லாலி
அறிவு மகளே லாலி
அம்மா மகளே லாலி
லாலி லாலி லாலி லாலி
லாலி லாலி லாலி லாலி



**நல். கருணாநிதி,** தொ.ப.ஆ,
அ.தொ.ப, பெருங்களூர்